# தமிழ் ஊர்காவற்படையின் தாக்குதலால் 4சிங்களஊர்காவற்படைபலிஆயுதங்கள்மீட்பு

(மணலாறு)

ரோந்து சென்ற சிறிலங்கா ஊர்காவற்படையினர் மீது தமிழ் ஊர்காவற்படை தாக்கி அழித்ததுடன் பல ஆயுதங்களையும் கைப்பற்றி உள்ளது. நேற்று முன்தினம் காலை பத்து மணியளவில் மணலாறு மாவட்டத்தில் உள்ள சூரியனாறு என்னும் கிராமத்தில் ரோந்து சென்று கொண்டிருந்த சிறிலங்கா அரசின் ஐந்து ஊர்காவற்படையினர் மீது தமிழ் மக்களின் ஊர்காவற்படை தாக்கியதில் நான்கு சிங்கள ஊர்காவற்படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அவர்களில் ஒருவன் பலத்த காயங்களுடன் தப்பி (4ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka, பக்கங்கள்: 04 விலைரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 01 பிரமோதூத ஞு கார்த்திகை மீ 05 உ புதன்கிழமை (21 - 11 - 1990) ஓசை 267

## இன்று சார்க் மாநாடு மாலேயில் ஆரம்பம்

(மாலே)

சார்க் நாடுகளின் ஐந்தாவது உச்சி மாநாடு இன்று மாலைதீவில் ஆரம்பமாகின்றது. இதற்காக இந்த அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் எல்லாநாடுகளினதும் தலைவர்கள் மாலைதீவிற்கு சென்றடைந்துள்ளனர். இதேவேளை அடுத்த ஆண்டு இலங்கையில் இந்த மாநாடு நடைபெறும் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் (4ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலை வீரர்களின் மரணம் இலட்சிய உயிர்பெறும் நிகழ்வு

## மாவீரர் நாளையொட்டி தலைவர் பிரபாகரன் அஞ்சலிச் செய்தி

(யாழ்ப்பாணம்)

“விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப் பிறவிகள். இரும்பையொத்த இலட்சிய உறுதியுடன், எதையும் தாங்கும் இதயத்துடன், சாவுக்கு அஞ்சாத வீரத்துடன் எமது வீரர்கள் போராடினார்கள். போர்க்களத்தில் வீர மரணத்தைத் தழுவினார்கள். ஒரு விடுதலை வீரனின் சாவு சாதாரண மரண நிகழ்வு அல்ல. சரித்திர நிகழ்வு. உன்னத இலட்சியம் உயிர்பெறும் அற்புதமான நிகழ்வு. அவனது உயிராக இயங்கிவந்த இலட்சிய நெருப்பு வரலாற்று சக்தியாகி இனத்தின் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பிவிடுகிறது”.

இவ்வாறு மாவீரர் தினம் தொடர்பாகத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.



இவ்வறிக்கையின் முழுவிபரமும் வருமாறு:

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழமக்களே.

தமிழீழ தேசிய சுதந்திரப்போரில் வீரமரணத்தைத் தழுவிக் காண்ட எமது விடுதலை வீரர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளாக கார்த்திகை 27ஆம் நாள் நினைவு கூரப்படுகின்றது. இதுவே எமது தேசிய நாளுமாகும்.

எமது வீர சுதந்திர வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கிறது. இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இழப்புக்கள் அல்ல. “இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போராட்டத்தின் உயிர்மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்கு சக்தியாக அமைந்துவிட்டது. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சிவிகள். சுதந்திரச் சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கல்லடிமுகாம்மீதுதாக்குதல் ஒரு இராணுவம் பலி

(மட்டக்களப்பு)

கல்லடி இராணுவ முகாமின் காவலரண் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் பலர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதானஇராணுவமுகாமான கல்லடிஇராணுவமுகாமின்காவலரண் மீது விடுதலைப்புலிகள் கால்கஸ்ரோ தாக்குதலையும் தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்

இத் தாக்குதல்களால் இராணுவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதோடு பலர் படுகாயமடைந்துள்ளனர். (மு)

## உரும்பிராயில் குண்டு வீச்சிற்கு வயோதிபத் தம்பதியர் பலி!

(உரும்பிராய்)

ஓலைகொட்டிலினுள் இருந்த வயோதிபத்தம்பதிகள் நேற்று உரும்பிராய்க் குண்டு வீச்சில் கொல்லப்பட்டனர்.

நேற்று காலையிலிருந்து மதியம்வரையிலும் மூன்று முறையாக உரும்பிராய் பகுதியில் சிறிலங்கா குண்டு வீச்சுவிமானங்கள் தாக்குதலை நடாத்தின காலை ஏழு நாற்பத்தைந்து மணிக்கும், காலை பத்துமணி, மதியம் ஒருமணி என திரும்பத் திரும்ப மூன்று விமானங்கள் உரும்பிராய், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் தெற்கு கற்பக விநாயகர் ஆலயப்பகுதி ஆகிய இடங்களில் உள்ள பொது மக்களின் வீடுகள் இதனால் சேதமுற்றன. காலை ஏழு நாற்பத்தைந்து மணியளவில் வில் போடப்பட்ட குண்டு வீச்சின்போது திரு. திருமதி சந்திரசேகரம் ஆகியோர் கொல்லப்பட்டனர். இதே (4 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் குண்டு வீச்சு வீடுகள் சேதம்

(சாவகச்சேரி)

கோவில் குடியிருப்பு, சங்கத்தானை, நுணாவில் கிழக்கு ஆகிய பகுதிகளில் நேற்றுப் பாரிய விமானக் குண்டுவீச்சில் சுமார் பதினைந்து வீடுகள் பலத்த சேதமடைந்தன.

நேற்றுக் காலை மூன்று சிறிலங்கா விமானப்படை விமானங்கள் வட்டமிட்டு கடுமையான தாக்குதலை (4ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை வினாத்தாள்கள் தேங்கிக் கிடக்கின்றன

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் உயர்கல்வி அமைச்சால் அனைத்துத் தொழில்நுட்பக்கல்லூரியிலும் பரீட்சைகள் நடாத்தப்பட்ட சமயம் யாழ்ப்பாணத்தொழில் நுட்பக்கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட வினாத்தாள்கள் யாவும் கொக்குவில் (4ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதம் தாங்கிய இலங்கையர் இராமேஸ்வரத்தில் கொள்ளை

(சென்னை)

இலங்கையைச் சேர்ந்த ஆயுதம்தாங்கியஇருவர் இராமேஸ்வரம் பகுதியில் துப்பாக்கி முனையில் கொள்ளையடித்துள்ளனர்.

இராமேஸ்வரம் ஆரியாங்குண்டு என்னுமிடத்திலுள்ள ஓய்வுபெற்ற ஆசிரியை ஒருவரின் வீட்டில் ஏ.கே. 47 ரகத் துப்பாக்கிகள் தாங்கிய இருவர் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தங்கநகைகளைக் கொள்ளை அடித்தனர்.

கொள்ளையடித்துக்கொண்டோடிய போது வழிமறித்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே..

வீரமரணம் அடைந்த போராளிகளின் விபரப்பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

## விசர்நாய்க்கடி அதிகரிப்பு முல்லையில் பலர் பலி

(மாங்குளம்)

முல்லைத்தீவில் விசர்நாய்க்கடிக்கு சிலர் பலியாகியும் பலர் ஆபத்தான கட்டத்திலும் இருந்து வருகின்றனர்.

முல்லைத்தீவில் ஏற்பட்டு வந்த வரட்சியாலும் உணவு இன்மையாலும் வீதிகளில் திரியும் விசர்நாய்கள் பலரைக் கடித்துத் துன்புறுத்தி வருகின்றது.

விசர்நாய்க்கடியால் ஐவருக்குமேல் இறந்துள்ளனர். பத்துக்கும் மேற்பட்டோர் ஆபத்தானநிலையிலுள்ளனர். விசர்நாய்த்தடுப்பூசி இப்பகுதி வைத்தியசாலைகளில் இல் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒத்திவைப்பு

வேங்கைகளின் விடுதலை வேதங்கள் என்னும் ஒலிப்பதிவு நாடா வெளியீடும் வைபவம் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிக (4ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

டில்கா வாச் வேக்ஸ்
DILKA WATCH WORKS

வாடிக்கையாளரின் வசதிக் கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட், பண்டத் தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும் றேடியோக்களும் உத்தரவாதத் துடன் திருத்திக் கொடுக்கப் படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (B-1554)

ரதிவோச் வேக்ஸ்

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 14 கஸ்தூரி யார் வீதியிலிருந்து இல. 12 பொன்னையா லேன் ஆறு கால்மடம் ஆனைக்கோட்டை யில் (பிடாரி கோவில் உப தபால் அலுவலகத்துக்கு அரு கில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையா ளர்களுக்கு அறியத் தருகின் றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது. (B 1580)

கபொ.த.மாணவர்களுக்கு

க.பொ.த உயர்தர மாண வர்க்குரிய நீர் நிலையியல். எழுதியவர்: வெக்டர் P.வேலா யுதம் B.Sc, S பிரேம் நாத் B.Sc, க. பொ. த. சாதாரண தரமாணவர்களுக்குரிய இலக் கிய வினாவிடைப் பூங்கா. எழுதியவர் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம். பெற்றுக்கொள் ளுமிடம், S. கணபதிப்பிள்ளை 7, சிவப்பிரகாசம் வீதி, வண் ணார்பண்ணையாழ்ப்பாணம். (B/1613)

மில்க்வைற்சலவைப் பவுடர்

துரித சலவைக்கும், பளிச்சி டும் வெண்மைக்கும், மில்க் வைற் சலவைப் பவுடர் 50 கிறாம் பவுடர் தனிட பைக்கற் ரூ. 3 00, 1 டசின் ரூ. 33/- 100 வெற்றுப் பைக்கற் ஒரு அழகிய லேஞ்சியைப் பெற் றுத் தருகிறது. மில்க்வைற் யாழ்ப்பாணம். (B/1615)


# பலாங்கொடை காணிப்பகிர்வில் தமிழ்தொழிலாளர் புறக்கணிப்பு

(நக்குவாவலை)

டலாங்கொடை றைதோட் டத்தில் 1922 ஏக்கர் காணி அரசாங்கத்தினால் சுவீகரிக் கப்பட்டு சமனலவேவ மற் றும் பல குடியிருப்புத் திட் டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதேவேளை இந்தத் தோட் டத்தில் வழி வழியாக வாழ் ந்து வரும் தமிழ் தொழி லாளர்கள் இந்தத் திட்டத் தில் இருந்து ஒதுக்கப்பட்டுள் ளனர்.

மூன்று பிரிவுகளைக் கொண்ட இந்தத் தோட்டம் அரச பெருந்தோட்ட யாக் கத்தின் நிருவாகத்தின் கீழ் வருகிறது. இப்படிப்பட்ட சுவீ கரிப்பு காரணமாக தோட் டத்தின் ஒரு பிரிவு மூடப் பட்டு குடியிருப்புத் திட்டத் திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால் தோட்டத்தில் வசி க்கும் 56 குடும்பங்களும் வெளி யில் இருந்து வேலைக்கு வரு பவர்களில் 53 குடும்பங்களும் காணி வழங்கும் திட்டத்தில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளன.

அதேபோல தொழிலாளர் களின் வேலைகளும் பாதிப் படைந்துள்ளது. காணிச் சுவீ கரிப்பால் தொழிலாளரின் வேலைகள் பாதிக்கப்படாது என்று உறுதி வழங்கப்பட்டா லும், இப்போது வாரத்தில் இரண்டு நாட்களுக்கு மட்டுமே வேலை வழங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதனை எதிர்த்து இலங்கை தேசியத் தோட்டத் தொழி லாளர் சங்கம் மூலமாக இந்த தோட்டத்து மக்கள் நிர்வா கத்திடம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.


UNIVERSITY OF JAFFNA, FACULTY OF AGRICULTURE KILINOCHCHI

Applications will be received by me from suitable candidates for the following post upto 1990-11-27.

**Temp. Demsnstrator in Agricultural Chemistry**

Salary Scale:
Temp. Demonstrator: 3,250/- p.m. (Fixed)

**Qualifications**
Temporary Demonstrator

A graduate or person awaiting results of a Final/Degree Examination Applicants are requested to apply together with their Bio-datas. Qualified applicants are also requested to present for an interview scheduled to be held on 1990 11-28 at 10-00 a m. in the Board Room of this University.

- REGISTRAR
University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1990-11-19.
(B/1612)


# மட்டு. பல்கலைக்கழகத்தில் கம்பியூட்டர்கள் திருட்டு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தில் இருந்த கம்பியூட் டர்கள், ரெலிவிஷன்கள், தள பாடங்கள், புத்தகங்கள் மற் றும் பெறுமதி மிக்க பொருள் கள் களவாடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

மாணவர்களின் குறிப்புப் புத்தகங்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் எடுத்து வருவ தற்கு சென்றிருந்த பல்கலைக் கழக பதிவாளர், கணக்கா ளர், விரிவுரையாளர்கள் ஆகி யோரே இந்தத் தகவல்க ளைத் தெரிவித்தனர்.

இங்கு பல்வேறு நூல்கள், பொருள்கள் அபரிக்கப்பட்டி ருப்பதோடு அங்குள்ள பொரு ள்களும் அலங்கோலமான நிலையில் காணப்படுகின்றன.

அகதிகள் அங்கு தங்கியி ருந்து வெளியேறிய பின்னர் பல்கலைக்கழகம் கவனிப்பா ரற்றுக் கிடந்ததாலேயே பொருள்கள் அபகரிக்கப்பட் டுள்ளது என்றும் விரிவுரை யாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை மயிலவட்ட வான் பகுதியில் அமைந்துள்ள சிறு சந்தைப் பகுதியில் இரு ந்து கொண்டு வரப்பட்ட ஆவணங்களினதும், நூல்க ளினதும் பேப்பர்களில் சாமான்கள் சுற்றப்படுவதாக வும் ஒரு கிலோ கிராம் பேப் பர் எட்டு ரூபாவிற்கு விற் கப்படுவதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

## அம்புலன்ஸ் மீது ஹெலி தாக்கு

(தெல்லிப்பளை)

பலாலி முகாம் ஷெல்லி னால் காயமடைந்த ஒரு வரை நேற்று முன்தினம் ஸ்தலத்திற்குச் சென்று ஏற்றி வந்த அம்புலன்ஸ் வண்டிமீது தெல்லிப்பளை பிரதான வீதி யில் வைத்து ஹெலி ஒன்று துரத்தித் துரத்திக் கலிபர் தாக்குதலை நடாத்தியது.

சாரதியின் சாதுரியத்தால் அம்புலன்ஸ் வண்டியும் நோயாளரும் எதுவித இழப்பு மின்றித் தப்பமுடிந்தது. (ச)

## பரீட்சை முடிவு அலுவலகங்களில் பெறலாம்

தபாற் சேவை சீரில்லாத பாதிக்கப்பட்ட பிரதேச மாணவர்களின் க. பொ. த. (சா/த) பரீட்சைப் பெறுபேறு களை அவ்வப்பகுதி கோட் டக் கல்வி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என வும் ஏனைய மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட் டுள்ளன எனவும் யாழ் கல் விப் பணிப்பாளர் அறிவித் துள்ளார். (மு)


90-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



வீரஜனனம் 12 — 04 — 1965

வீரமரணம் 25 — 08 — 1990

வீரவேங்கை மகிந்தன்
(ஏரம்பன் தங்கராசா)

25 - 08 - 90 அன்று மண்டைதீவில் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.

தமிழ் மண் மீட்கப் புறப்பட்ட தனயனே!
இன வெறிக் கூலிகளை எதிர்த்து
இலட்சியப் போர் தொடுத்தவனே - மகிந்தா!
பகைவரை வீழ்த்தும் வேளையில் நீ
பாரிய குண்டினை நெஞ்சினில் ஏற்று
தமிழீழ மண்ணுக்காய் தன்னையே ஈந்து
வீரமறவனாய் வீரவேங்கையாய்
களத்தினில் சமரிட்டு களப்பலியானாய்
மண்டைதீவினிலே எதிரியுடன் சமராடி
பண்டைய ஈழத்து மானம் காத்தவனே
உனது வழியில் உறுதியுடன் நின்று
தமிழீழம் மீட்போம், தாயகம் காப்போம்.

21 - 11 - 90 புதன்கிழமை நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

நெடியப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

— குடும்பத்தினர்
(B/1598)



நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

**கேள்வி அறிவித்தல் 1991**

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் 1991ஆம் ஆண்டு தை மாதம் 1ஆம் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 29. 11. 1990 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் யாவும், நல்லூர் பிரதேச சபை நிர்வாக அதிகாரியினால், கேள்வி வைப்புப் பணம், பத்திரப் பணம் ஆகியன செலுத்தியதன் பேரில் 28. 11 1990 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணி வரை வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாவும் 29 11. 1990 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக மூலப் பிரதியை, விசேட ஆணையாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனவும், இணைப் பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் எனவும் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது காரியாலய கேள்விப் பெட்டியில் போடலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில். ''குத்தகைக் கேள்வி 1991'' என தவறாது எழுதல் வேண்டும். கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டையுடன் முன் அனுபவ அத்தாட்சியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர். கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கமைய கேள்வித் தொகையைச் செலுத்தி, குத்தகையை நடாத்துதல் வேண்டும். நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை மீறுமிடத்து எதுவித நட்டஈடுமின்றி குத்தகை உரிமை ரத்துச் செய்யப்படும். எந்தக் கேள்வியையும் ஏற்கவோ அன்றி நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. குத்தகை நிலுவைகள் உள்ளவர்களுக்கு கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. தனியார் காணியில் கடை நடத்துபவர்கள், காணிச் சொந்தக்காரரிடம் அனுமதிக் கடிதம்பெற்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வி அறிவித்தல் நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் தேவைப்படின் காரியாலய வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்;

| இல. | குத்தகையின் தன்மை | கேள்விப்பத்திர மீளளிக்கப்படாத பணம் | கே. வை. பணம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1: | திருநெல்வேலி மத்திய சந்தை | 100 00 | 2 500 00 | 5,15 000 00 |
| 2: | திருநெல்வேலி சந்தை து. ச. வ. பா. நிலையம் | 50 00 | 500 00 | 8,000 00 |
| 3 | ஆடியபாதம் சந்தை (கொக்குவில்) | 50 00 | 1,000 00 | 53,000 00 |
| 4. | கோண்டாவில் ஸ்ரேசனடிச் சந்தை | 25 00 | 100 00 | 500 00 |
| 5: | கோண்டாவில் கிழக்கு மீன் சந்தை | 25 00 | 100 00 | 500 00 |
| 6. | திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல. 1 | 50 00 | 1,000 00 | 45,000 00 |
| 7: | திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல. 2 | 50 00 | 1,000 00 | 45,000 00 |
| 8. | மணியம்தோட்டம் மாட்டிறைச்சிக் கடை | 50 00 | 500 00 | 8,000 00 |
| 9. | ஆடியபாதம் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 50 00 | 500 00 | 14,000 00 |
| 10: | ஆடியபாதம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 50 00 | 500 00 | 18,000 00 |
| 11. | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 50 00 | 500 00 | 14.000 00 |
| 12. | கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 50 00 | 500 00 | 10,000 00 |
| 13. | கோண்டாவில் ஸ்ரேசனடிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 50 00 | 500 00 | 7,000 00 |
| 14. | 327, பலாலி வீதி, ஆட்டிறைச்சிக் கடை | 50 00 | 500 00 | 16,000 00 |
| 15. | 19, இராமநாதன் வீதி, மாட்டிறைச்சிக் கடை | 50 00 | 500 00 | 16,000 00 |
| 16. | பொற்பதி வீதி ஆட்டிறைச்சிக் கடை | 50 00 | 500 00 | 11,000 00 |
| 17. | இணுவில் மஞ்சத்தடி வீதி மாட்டிறைச்சிக் கடை | 50 00 | 500 00 | 10,000 00 |
| 18. | கோவில் தோட்டம் ஆட்டிறைச்சிக் கடை | 50 00 | 500 00 | 10,000 00 |

நல்லூர் பிரதேச சபைப் பணிமனை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
07.11.1990 (B 1611)

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்
நல்லூர் பிரதேச சபை.

## சிந்தனைக்கு

சுதந்திரத்தில் பற்றுக் கொண்டவர்கள்
சுதந்திரம் அடைவார்கள் என்பது உறுதி.

— எட்மன்ட்பர்க்

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம் 21-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகம்: 2288
த.பெ.எண் 65

# வரலாற்றில் நிலைக்கும் தலைமுறையாய் நிமிர்க!

தமிழீழப் பிரதேசத்தில் இன்று வாழும் மக்கள் பெருமைக்குரியவர்கள் ஆக வேண்டும். ஏனெனில் இவர்கள் தமிழ் மக்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சுதந்திரப் போராட்ட காலத்தில் வாழ்கின்றார்கள்.

இன்றைய காலகட்டத்தில் இந்த மண்ணில் வாழும் மக்கள் ஏதோ ஒருவகையில் போராட்டத்துடன் சம்பந்தப் படுகின்றார்கள். அவர்கள் சமூகமாகவோ அல்லது தனியாகவோ அதேவேளை நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ போராட்டத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றார்கள். அதாவது தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டத்தில் எல்லாளவேனும் அவர்கள் பங்கு உண்டு. அதனால் அவர்கள் சந்ததியினர் சுதந்திரமும் பெருமையும் அடைவார்கள்.

சுதந்திர போராட்ட காலத்தில் வாழும் சந்தர்ப்பம் ஒரு இனத்தின் அல்லது நாட்டின் எல்லாச் சந்ததிகளுக்கும் கிடைக்காது. ஒரு இனத்தினதோ நாட்டினதோ வரலாறு தனி மனித வரலாற்றைப் போன்று குறுகிய காலத்தைக் கொண்டதல்ல. பல நூற்றாண்டுகள், பல ஆயிரம் வருடங்கள் கொண்டதே ஒரு இனத்தின் அல்லது நாட்டின் வரலாறாகும். இந்த நீண்ட வரலாற்றுக் காலப்பகுதியில் சுதந்திரத்திற்கான போராட்டம் நடப்பது மிகவும் குறுகிய ஓரிரு தசாப்தங்களேயாகும். இதனால் இந்த ஓரிரு தசாப்தங்களில் வாழ்வதென்பது பெருமைக்குரியது என்பதில் சந்தேகமில்லை.

மேலும், ஒரு நாட்டின் அல்லது இனத்தின் சுதந்திரப் போராட்ட காலத்தில் அல்லது நெருக்கடியான காலத்தில்தான் அநேகமாக அந்த நாட்டில் அல்லது இனத்தில் பெருமை மிக்க வரலாற்று நாயகர்கள், சிந்தனாவாதிகள் மாவீரர்கள், கலைஞர்கள் தோன்றுகின்றார்கள். அத்தோடு உலகளாவிய கோட்பாடுகளும் உருவாகின்றன. இதற்கு உலக வரலாறே சான்று பகரும்.

பிரெஞ்சுப் புரட்சியின்போதுதான் ரூசோ வோல்டர் போன்ற தத்துவஞானிகள் தோன்றினார்கள். சுதந்திரம்-சமத்துவம்-சகோதரத்துவம் என்ற கோட்பாடு உருவாகின. இவர்களைத் தொடர்ந்தே மாவீரன் நெப்போலியன் தோன்றினான். இதேபோன்றே ரஷ்யாவில் மாக்ஸிஸ சித்தாந்தத்திற்கு ஒக்டோபர் புரட்சி உயிரூட்டியது. லெனின் போன்ற பெருந்தலைவர்கள் உருவானார்கள். இந்தியாவின் சுதந்திரப் போராட்ட காலத்திலேயே அகிம்சைக்கு செயல் வடிவம் கொடுக்கப்பட்டது. இந்தியர்களால் இன்று போற்றப்படும் காந்தி, நேரு, சுபாஸ் சந்திரபோஸ் போன்றதலைவர்கள் உருவானார்கள். இவ்வாறு உருவாகும் பெருந் தலைவர்களுடன் வாழும் அல்லது பழகும் சிறப்பை சுதந்திர போராட்ட காலத்தில் வாழும் மக்களே பெறுகின்றார்கள்.

அத்தோடு வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளும் இந்தக் காலப் பகுதியிலேயே இடம்பெறுகின்றன. ஒரு இனத்தின் வரலாற்றுப்புகழ்மிக்கபோராக இருப்பினும், ஒரு இனத்தால் நிகழ்த்தப்பட்ட பெரும் சாதனைகளாக இருப்பினும் சரிதான் அனேகமாக இக்காலத்தில்தான் அவை நிகழ்த்தப்படுகின்றன. பொதுவாக நெருக்கடிகளே மக்களைச் சாதனைகள் புரியத் தூண்டுவதனால் நெருக்கடி மிக்க சுதந்திரப் போராட்ட காலத்தில் சாதனைகள் நிகழ்த்தப்படுகின்றன அதேவேளை ஒரு சிறு நிகழ்ச்சியும் வரலாற்றில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதும் இந்தக் காலப்பகுதியில்தான்.

மேலும், ஒரு இனத்தின் அல்லது நாட்டின் வரலாற்றின் முக்கிய வரலாற்றுப் பகுதி சுதந்திரப் போராட்ட கால வரலாறே. இந்த வரலாற்றுக் காலப்பகுதியில் வாழ்வது வரலாற்றுச் சிறப்புமிக்கது, ஏனெனில், எதிர்காலச் சந்ததியோ தமது இனத்தின் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி படிக்கப்போகின்றதே ஒழிய ஈடுபடப்போகும் சந்தர்ப்பம் அதற்கு இல்லை. பெற்ற சுதந்திரத்தை கட்டிக்காக்கும் கடமையை மட்டுமே அவர்களுக்கு இச் சந்ததி விட்டுச் சென்றிருக்கும்.

அதேவேளை இன்றைய சுதந்திரப் போரால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள், துயரம்நிறைந்தவைகளாக இருப்பினும், அதனை எமது இனத்திற்கும், சமூகத்திற்குமான இழப்பாகக் கொள்ள வேண்டுமே ஒழிய விதிதலைப் போரால் துயரத்தில் ஆழ்த்தப்பட்டு விட்டோம், ஆழ்ந்து விட்டோம் எனக் கொள்ளுதல் அர்த்தமற்றது. ஏனெனில் எமது இனத்தின் நீண்ட வரலாற்றில் ஏற்படப்போகும் பெருவெற்றிக்காக நாம் இழக்கும் சிறுகாணிக்கைகள்.


எல்லாவற்றிற்கும் மேலாக மண்ணிற்காகவும், இனத்திற்காகவும் தியாகங்கள் புரிந்தவர்கள் என்ற பெருமை சுதந்திர போராட்ட காலத்தில் வாழும் சந்ததியினருக்கு உண்டு. ஆகையினால் இப் பெருமையை நாம் முழுமையாக்கிட எமது சந்ததி இன்றும் தீவிரமாக போராட்டத்தில் பங்காற்றிட வேண்டியுள்ளது.

# உதிக்கும் திசைநோக்கி

## உன்னத பயணம்

### 20

கேள்வி பதில் வடிவில் எமது உரையாடல் தொடர்ந்தது. ஐயா இந்த இடத்துக்கு நீங்கள் வந்து எவ்வளவு காலம்? மூன்று மாதகாலமாகிறது. கும்புறுமூலை அடியோட வெட்டைக்கிறங்கினது தான், மறுகா ஊர் போகயில்லை. இந்த இடத்தில் இருக்கிறீர்களே சாப்பாடு வசதிகள் எப்பிடி? கஷ்டம் தான், என்ன செய்யிற? இந்த இடத்துக்கு யாராவது வந்து உதவி செய்தார்களா? ஒருத்தரும் வரயில்ல மகன். இவ்வளவு மக்கள் இருக்கிறார்களே நோய் வந்தால் மருந்துக்கு என்ன செய்வீர்கள்? ஒரு மருந்தும் இல்லை. என்ட மகள் புள்ளைப் பெத்து அஞ்சு நாள், இண்டை வரை ஒரு குளிசையோ ஊசியோ இல்லை. இந்தப் பாலத்தடியில தான் இடக்கிறாள்.



முள்ளுச் செடியால் வேயப்பட்ட குடிசையில் வாழும் மட்டக்களப்பு மக்கள்

> மகளின் நிலையைக் கண்டார் தந்தை. "என்ட மகளே" என்று கதறியபடி கையை உயர்த்திக் கொண்டு திரும்பி வேகமாக ஓடி வந்தார். கல்லடிப்பாலத்தில் இராணுவத்தினர்மறித்தனர். அவர்களை விலக்கி விட்டு ஆற்றில் குதித்தார். அடுத்த நாள் தற்கொலை செய்து கொண்ட அவரது உடலும், கற்பழித்துக் கொலை செய்யப்பட்ட அலங்கோலமான நிலையிலிருந்த அவரது மகளின் சடலமும் ஆற்றங்கரையில் கரையொதுங்கின.

(இதைக் கூறும்போது கண்ணில் இருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிகிறது) நீங்கள் உங்கள் இடத்துக்குத் திரும்பிப் போக முடியாதா? எப்படி மகன் போறது. இணத்தில ஆக்களை வெட்டிப் போட்டிருக்கிறாங்கள். அதைப் பாத்தவங்க வந்து சொல்லுகிற போது என்னெண்டு மகன் போக மனம் வரும். இந்தப் பகுதியில் எவ்வளவு குடும்பங்கள் உள்ளன? இந்த இடமெல்லாம் ஆக்கள் தான். ஒரு ஐநூறு குடும்பம் வரும். உங்கள் சொந்த இடம் எது? சித்தாண்டி, ஒவ்வொரு கேள்விக்கும் கடகடவெனப் பதில் வந்தது.

அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்த்தேன். இது ஆற்றுப் பகுதியாதலால் சனக்கூட்டம் இலையான் மாதிரி மொய்த்துக் காணப்பட்டது. முழங்காலளவு தண்ணீர் உள்ள இந்த ஆற்றையே குளிப்பதற்கும், குடிப்பதற்கும் பாவிக்கின்றனர். இந்தத் தண்ணீருக்குசொந்தம்கொண்டாடியபடி இருநூறு மாடுகள் ஆற்றில் இறங்கின. மாடுகளும் மனிதர்களும் சமத்துவமாக இருந்த இந்த ஆற்றைக் கடந்து செல்கையில் துர்நாற்றம் மூக்கைத் துளைத்தது. அருகில் உள்ள சிறு காட்டில் உள்ள பற்றைகளையே அனைவரும் மலசலம் கழிக்கப் பயன்படுத்துவதால் அப்பகுதியில் செல்லும்போது மூக்கு மிகவும் சிரமப்பட்டது.

அங்குள்ள மக்கள் பலர் ஒரு புல்லினால் வேய்ந்த சிறு குடிசைகளில் இருந்தனர். அது ஒரு கோழிக் கூட்டைத்தான் ஞாபகப்படுத்தும். எனவே கரிகாலனிடம் "இந்தப் புல்லின் பெயர் என்ன?" என்று கேட்டேன். "இலுக்கு என்பார்கள். இலக்கணப்படி இணுக்கு என்பதே சரியான பெயர் என்கிறார்கள். இப்புல்லை வெட்டி ஏழுநாள் வெயிலில் காயவைத்தபின் வேய்ந்தால் ஏழுவருடங்கள் பாவிக்கலாம் என்றுகூறுவார்கள்" என்றார். சின்னச் சின்ன முள்ளுச்செடிகளால் வேயப்பட்டுக்கொண்டிருந்த குடிசைகளையும் கண்டோம்.

வழியில் இன்னொருவரைக் கண்டோம். நகரிலிருந்து வெளியேறி வந்தவர். அவரும் வயதுவந்த பெண்பிள்ளைகள் இருவரும் இருந்தனர். அவரை விசாரித்தேன். ஐயா ஏன் இந்தப் பகுதிக்கு வந்தீர்கள்? கொக்கட்டிச்சோலைப் பகுதி உங்களுக்குக் கிட்டத்தானே?

> "என்ட மகள் புள்ளைப் பெத்து அஞ்சு நாள்! இண்டை வரை ஒரு குளிசையோ, ஊசியோ இல்லை இந்தப் பாலத்தடியில தான்கிடக்கிறாள்."

இங்கே எனது சகோதரி வீட்டிற்கு வந்தேன். கலவரம் தொடங்கியபடியால் இங்கேயே தங்கிவிட்டேன். மட்டக்களப்பு நகரில் சிலர் வீடுகளில் தங்கியிருக்கிறார்கள் தானே? நீங்கள் ஏன் போக முயற்சிக்கவில்லை? பெண் பிள்ளைகள் உள்ள நாங்கள் அங்கே போகமுடியாது. இராணுவமும் முஸ்லிம் ஊர்காவல் படையும் வாழ்க்கையில் தாங்கள் பெண்களையே காணாதவர்கள் மாதிரி வெறித்தனத்துடன் நடந்து கொள்கின்றார்கள். கற்பழிக்கப்படும் பெண்களை கொன்று விடுகிறார்கள். இப்படி பெண்கள் கற்பழிக்கப்பட்ட சம்பவம் ஏதாவது அறிந்தீர்களா? என்று கேட்டதும் பெருமூச்செறிந்தார்.

இராணுவம் நகருக்குள்வந்து சில நாள் செல்ல வீட்டில் இருக்கும் சாப்பாட்டுச் சாமான்களை எடுப்பதற்கு நான் மட்டும் தனியே நகருக்குள் போனேன். அன்று ஒரு சம்பவம் நடந்தது. மட்டக்களப்பு நகரிலிருந்து கல்லடிப் பாலம் வழியாக சைக்கிளில் ஒரு தந்தையும் மகளும் செல்ல முயன்றனர். பெரும்பாலும் மஞ்சத் தொடுவாய்ப் பக்கமாகத்தான் போகப்புறப்பட்டிருப்பார்கள். ஏனென்றால் காத்தான்குடியைத் தாண்டிப்போக முடியாது. தந்தைக்கு 50 வயதிருக்கும். மகளுக்கு 20 வயதிருக்கும். கல்லடிப்பாலத்தை நெருங்கியதும் இராணுவத்தினர் இவர்களைத் தடுத்து நிறுத்தினர். கொண்டுபோன பொருள்களை சோதித்ததும் மகளைக் கொண்டுபோய்ச் சோதிக்க வேண்டும் என்றனர்; தகப்பனோ மகளை விட்டுவிடுங்கள் என்று கெஞ்சினார். கதறினார். அவரது கெஞ்சலையோ, கதறலையோ அவர்கள் கணக்கிலெடுக்கவில்லை. கல்லடிப்பாலத்தடியில் தாங்கள் தங்கியிருந்த இடத்துக்குக் கொண்டுபோனார்கள். தகப்பனோ கதறிக்கொண்டேயிருந்தார். இவர் கதறும்போது இடையிடையே இவருக்கு அடியும் விழுந்தது. இவரோ தொடர்ந்து கதறிக்கொண்டிருந்தார். கடைசியில், ஒரு மணித்தியாலம் செல்ல மகளைக் காட்டுகிறோம் என்று கூட்டிக் கொண்டு போனார்கள். மகளின் நிலையைக் கண்டார் தந்தை. "என்ட மகளே" என்று கதறியபடியே கையை உயர்த்திக் கொண்டு திரும்பி வேகமாக ஓடி வந்தார். கல்லடிப் பாலத்தில் இராணுவத்தினர் மறித்தனர். அவர்களை விலக்கிவிட்டு ஆற்றில் குதித்தார். இதைத் தான் நாங்கள் கண்டோம். அடுத்த நாள் தற்கொலை செய்து கொண்ட இவரது உடலும், கற்பழித்துக் கொலை செய்யப்பட்ட அலங்கோலமான நிலையிலிருந்த அவரது மகளின் சடலமும் ஆற்றங்கரையில் கரை ஒதுங்கினது என்றார். கல்லடிப் பாலத்தடியில் நின்று வாவியில் உள்ள மீன்களின் இனிமையான இசையைப் பலரும் செவிமடுப்பதுண்டு. நிச்சயமாக அன்றைய தினம் அந்த மீன்கள் ஆனந்த கீதம் இசைத்திருக்க மாட்டா.

(தொடரும்)

## நீரில் மூழ்கி சிறுவன் மரணம்

(குருநகர்)

கொழும்புத்துறை, துரையப்பா வித்தியாலயத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருக்கும் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் தெடுங்குளத்தில் குளிக்கச் சென்ற சமயம் நீரில் மூழ்கிப் பலியானான்.

# யாழ்., கிளிநொச்சியில் பொதுச் சுகாதாரம் சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பொதுச் சுகாதாரம் சீர்கெட்டுப் போய்உள்ளதுடன் இவற்றைப் பரிசோதிக்கும் பொது சுகாதாரப் பரிசோதகர்களும் போதிய அளவில் கடமையில் இல்லை;

இதனால் இப் பகுதியில் உள்ள உணவுச்சாலைகள், பேக்கரிகள், இறைச்சிக்கடைகள் போன்றவற்றில் நிலவும் சுகாதார சீர்கேடுகளை பரிசோதித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை.

இப் பகுதிகளுக்கு மொத்தம் 55 பொது சுகாதாரப் பரிசோதகர்கள் கடமையில் இருக்க வேண்டும். ஆனால் 22 பொது சுகாதாரப் பரிசோதகர்களே தற்போது கடமையில் உள்ளனர். இவர்களும் இக் கடமையை தற்போது மேற்கொள்ள முடியாமைக்கு பல காரணங்களைக் காட்டி தட்டிக் கழிக்கின்றனர்.

இதேபோலபாவனையாளர் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளும் தாம் விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போதிய பாதுகாப்பும போக்குவரத்து வசதிகளும் இல்லை என்று காரணம் காட்டுகின்றனர். இதனால் மொத்தில் இப் பகுதி மக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். (க)

# புகையிரத ஊழியர்களின் ஓய்வூதிய வவுச்சர்கள் வந்தன

(அலுவலக நிருபர்)

கடந்த யூலை மாதத்தில் இருந்து கிடைக்கப் பெறாதிருந்த புகையிரத ஊழியர்களுக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் யாழ் அரச அதிபரின் பெருமுயற்சியினால் இங்கு வந்து சேர்ந்துள்ளன;

யூலை, ஆகஸ்ட் மாதங்களுக்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் கொழும்பிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டு அவற்றிற்குரிய கொடுப்பனவுக்கு வங்கிகளில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்கள் தங்களுக்கு உரிய ஓய்வூதிய வவுச்சர்களை இல. 65ஏ, நாலாம் குறுக்குத் தெருவில் வட இலங்கை ஓய்வூதியர் சங்கச் செயலாளர் திரு. ஏ. வீ. ஸ்ரனிஸ்லொஸ் என்பவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (மூ)

# மரணங்கள் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும்

இந்த மண்ணில் பிறக்கின்ற ஒவ்வோர்ஜீவனும்மரணத்தை அடையும்என்பதுஉண்மையே. இந்த மரணங்கள் அர்த்தம் உள்ளவையாக இருந்தால் மற்றையோர் போற்றுவார்கள். ஆகையினாலே தமிழீழ மண்ணிற்காகவும், மக்களிற்காகவும் போராடிமரணத்தை தழுவிக் கொள்வோர் மக்கள் போற்றும்மாவீரராகின்றனர். இந்த வீரர்களை ஆண்டுதோறும் கூட்டுறவாளர்கள் நினைவு கூருவதுடன் அவர்கள் சென்ற பாதை வழியே நாமும் செல்வோம்! செயல்படுவோம்!

இவ்வாறு யாழ். மாவட்ட கூட்டுறவாளர் நடாத்தும் தமிழீழ மாவீரர் நாளை ஒட்டி கூட்டுறவாளர் யாழ். கோட்டம் விடுத்த சிறப்புச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது. யாழ். கோட்ட கூட்டுறவாளரின் கோட்ட நிகழ்ச்சிகள் இன்று பகல் ஒரு மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

## கொழும்பில் சிகிச்சைக்கு

# சிபார்சு செய்யப்பட்டோர் ஆவணங்களுடன் சமு[illegible]தரவும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில்விசேடசிகிச்சை பெறுவதற்கு யாராவது வைத்திய அதிகாரிகளால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளிகள் இன்று அல்லது நாளை காலை பத்துமணிக்கு சகல மருத்துவ ஆவணங்களுடன் யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு சமு[illegible]ம் தரவும்.

இவர்களை வைத்திய அதிகாரிகள் குழுஒன்று பரிசோதித்து இருபத்தைந்து நோயாளர்களைத் தெரிவுசெய்து கப்பல் மூலம் கொழும்பு சென்று சிகிச்சைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளும். (க)

விடுதலை

காக தமது இன்னுயிரை அர்ப்பணித்துள்ள இந்த மகத்தான தியாகிகள் காலம் காலமாக எமது இதயக்கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.''

# அவர்கள் இலட்சியவாதிகள்

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல. அவன் ஒரு இலட்சியவாதி. ஒரு உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன் தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக, விமோசனத்திற்காக வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது, அர்த்தமானது, சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே, விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப் பிறவிகள். அசாதாரணமான பிறவிகள்.

# வீரர்கள்சாவு ஒரு சரித்திர நிகழ்வு

''ஒரு விடுதலைவீரனின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வு அல்ல. அந்தச்சாவு ஒரு சரித்திர நிகழ்வு. ஒரு உன்னத இலட்சியம் உயிர்பெறும் அற்புதமான நிகழ்வு, உண்மையில் ஒரு விடுதலைவீரன் சாவதில்லை. அவனது உயிராக இயங்கிவந்த இலட்சிய நெருப்பு, என்றுமே அணைந்துவிடுவதில்லை; அந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்றுச் சக்தியாக மற்றவர்களைப் பற்றிக்கொள்கிறது ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவை தட்டி எழுப்பி விடுகிறது.''

தமிழீழ சுதந்திரப் போர் இன்று ஆசியாக் கண்டத்தில் முதன்மையான விடுதலைப்போராட்டமாக சர்வதேசப் புகழ் அடைந்திருக்கிறது. மூன்றாம் உலகின் ஒடுக்கப்படும் இனங்களுக்கும் அடக்கப்படும் மக்களுக்கும் எமது புரட்சிகர ஆயுதப் போராட்டம் ஒரு முன்னுதாரணமாக வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. சிங்கள ஆயுதப் படைகளையும் உலகின் மிகப்பெரிய இந்தியப் படைகளையும் தனித்துநின்று போராடி

ஒத்திவைப்பு

ளின் கலை, கலாசாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். இவ் வைபவம் நேற்று மாலை உரும்பிராயிலுள்ள அன்னை பூபதி கலையரங்கில் இடம் பெற இருந்தது தெரிந்ததே.

இன்று சார்க்

ஹரல் ஹேரத் தெரிவித்தார். இதற்கான அங்கீகாரத்தை அங்கத்துவ நாடுகளிடம் இருந்து பெற்றுள்ளதாகவும்அவர் தெரிவித்தார்.

ஐந்தாவது உச்சி மாநாடு இலங்கையிலேயே முதலில் நடைபெறுவதாக இருந்ததும் பின்னர் வடக்குக் கிழக்கு பிரச்சினையால் மாலைதீவில் நடைபெறவேண்டி வந்ததும் தெரிந்ததே.

இன்று ஆரம்பமாகும் மாநாட்டில் இந்தியாவின் புதிய பிரதமர் சந்திரசேகரும், பாகிஸ்தான் புதிய பிரதமர் நவாப் சரீப்பும் பங்கேற்பது முக்கியமான விடயமாகக் கருதப்படுகின்றது.

விசர்நாய்

லாததால் சிலர் இறந்தும், பலர் இறக்கும் ஆபத்தான நிலையிலும் உள்ளனர்.

ஏ. ஆர் வி. மருந்து உடன் இப்பகுதிக்குக் கிடைக்காது விடின் ஆபத்தானவர்களும் இறக்கலாமென அஞ்சப்படு

# புலமைப்பரிசில் பெற குடும்ப வருமான உச்சவரம்பு

பல்கலைக் கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில்களை வழங்கும்போது அவர்களின் பெற்றோரின் வருடாந்த வருமானம் 36,000 ரூபாவுக்குக்குறைவாக இருக்க வேண்டுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புள்ளி அடிப்படையிலும், வருமான அடிப்படையிலும் இந்தப் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை 28,000 ரூபாவிற்கு குறைவான வருடாந்த வருமானம் பெற்றுவருபவருக்கே புலமைப் பரிசில்கள் வழங்கப் பட்டுவந்தது.

சாவகச்சேரி

மேற்கொண்டன. இந்த விமானங்களிலிருந்து வீசப்பட்ட குண்டுகள் அ. வேலாயுதம், ஜெ சந்திரராணி, ந. நவமலர், க. சின்னத்தம்பி, ஆகியோரின் வீடுகளை கோயில்குடியிருப்புப் பகுதியில் சேதமாக்கின மேலும் சங்கத்தாணைப் பகுதியில் கூ. பாலசிங்கம், ஆ. தனபாலசிங்கம், ந. கோபாலரட்

# புலிகளின் குரல் வானொலி சேவை

(யாழ்ப்பாணம்)

'புலிகளின்குரல்வானொலி' இன்று காலை 9.00மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. புலிகளின் குரல் வானொலியை பண்பலை வரிசை 4 மீற்றரில் (எப். எம். 94) கேட்கலாம்.

உரும்பிராயில்

தாக்குதலில் எம். கமலன் (வயது 10) திருமதி பாக்கியரத்தினம் (வயது 65) ஆகியோர் காயமுற்றுள்ளனர்.

இதே வேளை உரும்பிராய்

உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே, விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப் பிறவிகள். அசாதாரணமான பிறவிகள்.

## வீரர்கள்சாவு ஒரு சரித்திர நிகழ்வு

‘‘ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வு அல்ல. அந்தச்சாவு ஒரு சரித்திர நிகழ்வு. ஒரு உன்னத இலட்சியம் உயிர்பெறும் அற்புதமான நிகழ்வு, உண்மையில் ஒரு விடுதலைவீரன் சாவதில்லை. அவனது உயிராக இயங்கிவந்த இலட்சிய நெருப்பு, என்றுமே அணைந்துவிடுவதில்லை; அந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்றுச் சக்தியாக மற்றவர்களைப் பற்றிக்கொள்கிறது ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவை தட்டி எழுப்பி விடுகிறது.’’

தமிழீழ சுதந்திரப் போர் இன்று ஆசியாக் கண்டத்தில் முதன்மையான விடுதலைப்போராட்டமாக சர்வதேசப் புகழ் அடைந்திருக்கிறது. மூன்றாம் உலகின் ஒடுக்கப்படும் இனங்களுக்கும் அடக்கப்படும் மக்களுக்கும் எமது புரட்சிகர ஆயுதப் போராட்டம் ஒரு முன்னுதாரணமாக வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. சிங்கள ஆயுதப் படைகளையும் உலகின் மிகப்பெரிய இந்தியப் படைகளையும் தனித்துநின்று போராடி எமது மாவீரர்கள் படைத்த மகத்தான சாதனைகள் இன்று உலக வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. நீண்டதும், கடினமானதும், அபாயகரமானதுமான இந்த யுத்தங்களில் எமது விடுதலை வீரர்கள் சந்தித்த இன்னல்களை, இடையூறுகளை, துன்பங்களை எழுத்தில் விபரிக்க முடியாது. இரும்பையொத்த இலட்சிய உறுதியுடன், எதையும் தாங்கும் இதயத்துடன், சாவுக்கு அஞ்சா வீரத்துடன் எமது வீரர்கள் போராடினார்கள். போர்க்களத்தில் வீரமரணத்தைத் தழுவினார்கள்.

## சோகத்தில் நான் சோர்ந்ததில்லை

நான் உயிருக்கு உயிராக நேசித்த தோழர்கள், என்னுடன் தோளோடு தோள்நின்று போராடிய தளபதிகள், நான் பல்லாண்டு காலமாக வளர்த்தெடுத்த போராளிகள் களத்தில் வீழ்ந்த போதெல்லாம் எனது இதயம் வெடிக்கும். ஆயினும் சோகத்தால் நான் சோர்ந்துபோவதில்லை. இந்த இழப்புக்கள் எனது இலட்சிய உறுதிக்கு மேலும் மேலும் உரமூட்டியிருக்கின்றது.

இந்த மாவீரர்களை நான் கௌரவிக்கின்றேன்.

அவர்களுக்குச் சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறேன். அவர்களது தியாகத்தையும், வீரத்தையும், விடுதலைப் பற்றையும் எண்ணிப் பார்க்கும் போது எனது உள்ளம் பெருமை கொள்கிறது.

இந்த மண்ணின் மைந்தர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் நான் போற்றுகிறேன்.

உங்களது குழந்தைகள் தமது உயிருக்கும் மேலாக தமது தாய் நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை ஒரு புனித இலட்சியத்துக்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை, சரித்திரமாகி விட்டார்கள்.

## போராடித்தான் ஆகவேண்டும்

எமது தாய் நாடு விடுதலை பெற வேண்டும். எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்பட வேண்டும். எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும். இந்த இலட்சியம் ஈடேற வேண்டுமாயின் நாம் போராடித் தான் ஆகவேண்டும். இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும்.

‘‘நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கின்றோம். அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தால் நீர்பாய்ச்சி வளர்க்கின்றோம். அந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை நினைவாக்குவோம்’’

*‘‘புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்’’*

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31–ஆம் இலக்கத்திலுள்ள ‘‘ஈழநாதம்’’ பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பின்னர் வடக்குக் கிழக்கு பிரச்சினையால் மாலைதீவில் நடைபெறவேண்டி வந்ததும் தெரிந்ததே.

இன்று ஆரம்பமாகும் மாநாட்டில் இந்தியாவின் புதிய பிரதமர் சந்திரசேகரும், பாகிஸ்தான் புதிய பிரதமர் நவாப் சரீப்பும் பங்கேற்பது முக்கியமான விடயமாகக் கருதப்படுகின்றது.

---

விசர்நாய்

லாததால் சிலர் இறந்தும், பலர் இறக்கும் ஆபத்தான நிலையிலும் உள்ளனர்.

ஏ. ஆர். வி. மருந்து உடன் இப்பகுதிக்குக் கிடைக்காதுவிடின் ஆபத்தானவர்களும் இறக்கலாமென அஞ்சப்படுகின்றது. (82)

---

பரீட்சை

தொழில் நுட்பக் கல்லூரியில் தேங்கிக்கிடக்கின்றன. பரீட்சைகள் நடப்பதாகத் திட்டமிடப்பட்ட திகதிக்குப் பின்னரே இவை வந்துசேர்ந்ததால் மாணவர்களுக்குப் பரீட்சைகள் ஏதும் நடத்தமுடியாது போயிருந்தது.

இதேவேளை கடந்தஜூன் மாதம் 18ஆம் திகதி மூடப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரி சரியாக ஐந்துமாதங்களின் பின்னர் இந்த மாதம் 19ஆம் திகதி மீண்டும் ஆரம்பித்தது. அன்றையதினம் காலை 8 மணியளவில் யாழ். நகரின் மேலாக விமான நடமாட்டம் அதிகரித்திருந்த போதிலும் மாணவர் வரவு அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (லோ)

---

தமிழ்

ஒடியுள்ளான்;

தமிழ் மக்களின் கிராமங்களைப் பாதுகாக்கவென ஒழுங்கு செய்யப்பட்ட தமிழ் மககளின் ஊர்காவற் படையால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது தாக்குதல் இதுவே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிங்கள ஊர்காவற்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் அவர்களிடமிருந்து 303 ரகறைபிள்-04, அதற்கான மகசீன் - 04, 303 ரவைகள் –106, மாடு வெட்ட உரிக்க பயன்படுத்தப்படும் கத்தி - 2, ஹெல்சர்-1 என்பன தமிழ் ஊர்காவற்படையால் கைப்பற்றப்பட்டன.

இத்தகைய தாக்குதல் தமிழ் மக்களின் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் போராட்டத்தின் பரிணாம வளர்ச்சியை எடுத்துக் காட்டி நிற்கின்றது.

மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புள்ளி அடிப்படையிலும், வருமான அடிப்படையிலும் இந்தப் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

---

சாவகச்சேரி

மேற்கொண்டன. இந்த விமானங்களிலிருந்து வீசப்பட்ட குண்டுகள் அ. வேலாயுதம், ஜெ சந்திரராணி, ந. நவமலர், க. சின்னத்தம்பி, ஆகியோரின் வீடுகளை கோயில்குடியிருப்புப் பகுதியில் சேதமாக்கின மேலும் சங்கத்தானைப் பகுதியில் சு. பாலசிங்கம், ஆ. தனபாலசிங்கம், ந. கோபாலரட்ணம் ஆகியோரின் வீடுகளை சேதமாக்கின.

நுணாவில் கிழக்குப் பகுதியில் வீசப்பட்ட போது யூனியன் பேக்கரிக்கு அருகில் உள்ள வீடுகள் சேதமாயின: இதில் எஸ். பாலசிங்கம், கே பசுபதிப்பிள்ளை, நாகபூசணி கருணாகரன். எஸ். சோமசுந்தரம் எஸ். சிவராஜா, எஸ். வினாசித்தம்பி ஆகியோரது வீடுகள் உட்பட சிவா சைக்கிள் வேக்ஸ் என்னும் சைக்கிள் திருத்துமிடமும் சேதமாகியது. இருந்தும் இந்தத் தாக்குதலில் பொது மக்கள் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**கோயில் குடியிருப்பில்**

மிகக் குறுகிய காலத்திற்குள் மூன்றாவது தடவையாக கோயில் குடியிருப்புப் பகுதி வீடுகள் விமானத் தாக்குதலுக்கு உள்ளாகி சேதமடைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

## புலிகளின் குரல் வானொலி சேவை

(யாழ்ப்பாணம்)

‘புலிகளின்குரல்வானொலி’ இன்று காலை 9.00மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. புலிகளின் குரல் வானொலியை பண்பலை வரிசை 4 மீற்றரில் (எப். எம். 94) கேட்கலாம்.

---

உரும்பிராயில்

தாக்குதலில் எம். கமலன் (வயது 10) திருமதி பாக்கியரத்தினம் (வயது 65) ஆகியோர் காயமுற்றுள்ளனர்.

இதே வேளை உரும்பிராய் சந்திப் பகுதிக்கு அண்மையில் இடம்பெற்ற குண்டு வீச்சு ஒன்றில் வெற்றுத் தரையில் வீழ்ந்த குண்டு பாரியகிடங்கு ஒன்றை ஏற்படுத்தி உள்ளது. இந்த கிடங்கின் அகலம் 12 அடி ஆழம் 6 அடிக்கும் கூடுதலானதாகும் குண்டு வீச்சுக்கு இலக்கான பகுதியிலேயே அன்னை பூபதி கலையரங்கம் அமைந்துள்ளது என்பதும், குறிப்பிடத்தக்கது.

அதேவேளை வலிகாமம் பகுதியில் பரவலான ஹெலிச் சூடு நிகழ்த்தப்பட்டது. (32)

---

ஆயுதம்

தமிழகப் பொலிசாரை அடித்துப்போட்டுவிட்டு இவர்கள் தப்பி ஓடிவிட்டனர். இவர்கள் வாக்கிடோக்கிக் கருவி வைத்திருந்தனர் எனவும், இலங்கையை விட்டு வெளியேறிய தமிழ்க்குழுவைச் சேர்ந்தவர்கள் எனவும் தமிழகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

---

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை நடேசபிள்ளை

(உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி, யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி வேலுப்பிள்ளை நடேசபிள்ளை காலமாகிவிட்டார்.

அன்னாரது ஈமக்கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;

வே. ஐயம்பெருமாள்

(சகோதரர்)

(R- 854)